*உங்கள் விடுமுறையை வசதியாக கழிக்க அல்லது நடமாடும் கடமையை நிறைவேற்ற காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் சுற்றுலா விடுதியை தேர்ந்தெடுத்ததற்கு முதலில் நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்.*

*சுற்றுலா விடுதிகளை பராமரிக்க அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவிட்டிருந்த போதிலும் இந்த வசதி உங்களுக்கு குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டுள்ளது. தளபாடங்கள், சுற்றியுள்ள தோட்டம் ஏனையவை உட்பட அனைத்து சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகும் எனவே அவற்றை பராமரிக்க நீங்களும், உங்களுடன் துணையாக இருப்பவர்களும் வழங்கும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.*

*தயவுசெய்து இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீது உங்கள் அவதானத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன் உங்கள் விடுமுறையை சந்தோசமாகவும் பயனுள்ள வகையிலும் கழிக்கவும்.*

*அறைகள் பற்றிய விபரம்*

1. *அறைஇல. 1 இரட்டைக் கட்டில்கள் 2*
2. *அறைஇல. 2 இரட்டைக் கட்டில்கள் 1 தனிக்கட்டில் 1*
3. *அறைஇல. 3 இரட்டைக் கட்டில்கள் 1 தனிக்கட்டில் 1*



*சுற்றுலா விடுதியை முன்பதிவு செய்வதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனுமதிக்காக தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.*

*அறைகளுக்கான கட்டணம் பின்வருமாறு உள்ளது*

| அறை இலக்கம் | விடுமுறை வகை | காணி உபயோகக் கொள்கைத் திட்மிடல் திணைக்களம். | காணி அமைச்சு | ஏனைய அரச நிறுவனங்கள் | பகுதியான அரச பங்குடைய நிறுவனங்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்கள் |
|---|---|---|---|---|---|
| அறைஇல. 1 | கடமை | 100/- | 150/- | 350/- | 450/- |
| | மற்றவை | 150/- | 200/- | 500/- | 600/- |
| அறைஇல. 2 | கடமை | 75/- | 125/- | 300/- | 400/- |
| | மற்றவை | 150/- | 200/- | 450/- | 550/- |
| அறைஇல. 3 | கடமை | 75/- | 125/- | 300/- | 400/- |
| | மற்றவை | 150/- | 200/- | 450/- | 550/- |

மேற்குறிப்பிட்ட கட்டணங்கள் அறையொன்றிற்கு ஒரு இரவுக்கான கட்டணமாகும். சேவைக் கட்டணமாக மேலதிகமாக ரூபா.380/= கண்டி மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்திற்காக அறவிடப்படும்.

மேலும் சுத்திகரிப்பு கட்டணம் (ரூபா.380/=) எல்.பி.காஸ் இற்கான செலவு (பாவித்தால்) (ரூபா.380/=) சுற்றுலா விடுதிக் காப்பாளரிடம் செலுத்தவேண்டும்.

ஒதுக்கீடு செய்வதற்கான விண்ணப்பம் தலைமை அலுவலகத்தில் அல்லது மாவட்ட அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது எமது வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.www.luppd.lk

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல்
திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவு - 011-2500338







**பல்லேகல காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின சுற்றுலா விடுதியை முன்பதிவு செய்யும் விண்ணப்பதாரி இணங்க வேண்டிய நிபந்தனைகள்**

1.விண்ணப்பதாரர் மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட நபர்கள் தவிர வேறு எவரும் சுற்றுலா விடுதியில் தங்குவதற்கு முடியாது.

2.விண்ணப்பதாரர் அவருடன் தங்கும் மற்றய நபர்களின் அடையாளம் சம்பந்தப்பட்டவைபற்றி திருப்தி அடைதல் வேண்டும், அத்துடன் தங்கியிருக்கும் காலத்தில் அனைத்துப் பொறுப்புகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3.விண்ணப்பதாரருடன் தங்கும் மற்றய நபர்களின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இல. ஆகியவற்றை கட்டாயமாக வழங்க வேண்டும். அத்துடன் வழங்கப்பட்ட தகவல்களின் சரியான தன்மைக்கு அவர் / அவள் பொறுப்பேற்க வேண்டும்.

4.தங்கியிருக்கும் காலத்தில் சொத்துகளுக்கு ஏதாவது சேதம் ஏற்படுமாயின் கா.ப.கொ.தி.தி இன் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் விண்ணப்பதாரி யிடமிருந்து அறவீடு செய்யப்படும.

5.தங்கியிருப்பவர்கள் சுற்றுலா விடுதியில் மதுபானம் அருந்தவும் புகைத்தலுக்கும் முற்றாக தடை செய்யப் பட்டுள்ளது.

6.அவசரமான உத்தியோகபூர்வ வேண்டுகோள் காரணமாக இந்த ஒதுக்கீடு இரத்துச் செய்யப்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் மட்டும் செலுத்தப்படும் தொகை மீளளிக்கப் படும் அல்லது பதிலாக வேறொரு திகதி வழங்கப்படும்.

7.முன்பதிவு இரத்துச் செய்ய முடியாது. ஏதாவது சந்தர்ப்பத்தில் முன்பதிவுசெய்த காலத்தில் பயன்படுத்தப் படாவிட்டால் செலுத்தப்பட்ட தொகை மீளளிக்கப் படமாட்டாது அத்துடன் பதிலாக வேறொரு திகதியும் வழங்கப் படமாட்டாது.

8.முன்பதிவு செய்வதற்கான அதிகபட்ச காலம் 05 நாட்களாகும்.

மேலேயுள்ள அறிவுறுத்தல்களையும் நிபந்தனைகளையும் நான் கவனமாக வாசித்து அவற்றை பின்பற்றவதற்கு இணங்குகிறேன்.




நீங்கள் கீழேயுள்ள வரைபடத்தை பின்பற்றுவதன் மூலம் சுற்றுலா விடுதியை அடையலாம்



***நன்றி***




GUIDING FOR BETTER LAND USE

# காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்



***கண்டி - பல்லேகல சுற்றுலா விடுதி***


